**பெருநகர சென்னை மாநகராட்சி**

**செய்தி வெளியீடு**

**செ.வெ.எண். 215** **நாள் : 20.12.2024**

**பெருநகர சென்னை மாநகராட்சிப் பகுதிகளில் நெகிழிப் பைகளுக்கு மாற்றாக, துணிப்பைகளைப் பயன்படுத்தும் வகையில் "மீண்டும் மஞ்சப்பை" விழிப்புணர்வு முகாமினை மாண்புமிகு மேயர் திருமதி ஆர்.பிரியா அவர்கள் இன்று தொடங்கி வைத்தார்.**

பெருநகர சென்னை மாநகராட்சிப் பகுதிகளில் நெகிழிப் பைகளுக்கு மாற்றாக, துணிப்பைகளைப் பயன்படுத்தும் வகையில் "மீண்டும் மஞ்சப்பை" விழிப்புணர்வு முகாமினை மாண்புமிகு மேயர் திருமதி ஆர்.பிரியா அவர்கள், அம்பத்தூர் மண்டலத்திற்குட்பட்ட அம்பத்தூர் OT மார்க்கெட் பகுதியில் இன்று (20.12.2024) தொடங்கி வைத்து, பொதுமக்களுக்கு மஞ்சப்பைகளை வழங்கினார்.

**இந்நிகழ்ச்சியில், மாண்புமிகு மேயர் அவர்கள் பேசியதாவது :**

அம்பத்தூர் மண்டலத்திற்குட்பட்ட மார்க்கெட் பகுதிகளில் மீண்டும் மஞ்சப்பைகளை பயன்படுத்துவது குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்துவதற்கான முக்கிய காரணம் இங்கு வியாபாரிகள் அதிகமாக உள்ளனர். பிளாஸ்டிக் பயன்பாடு என்பது பிளாஸ்டிக் பைகளைத் தாண்டி, பிளாஸ்டிக் கப், தட்டுகள் மற்றும் ஸ்பூன் ஆகியவற்றை நாம் அன்றாட உபயோகத்திற்கு பயன்படுத்தி வருகின்றோம்.

இவ்வாறான பிளாஸ்டிக் பயன்பாடுகளை தவிர்த்து, சுற்றுச்சூழலை பாதுகாக்கும் வகையில், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 2021ஆம் ஆண்டு “மீண்டும் மஞ்சப்பை” திட்டத்தைத் தொடங்கி வைத்து, அனைத்துப் பகுதிகளிலும் இலவசமாக மஞ்சப்பைகளை வழங்கினார்கள். பெருநகர சென்னை மாநகராட்சிப் பகுதிகளில் இதுநாள்வரை 2 இலட்சத்திற்கும் அதிகமாக மஞ்சப்பைகள் வழங்கப்பட்டுள்ளன.

பெருநகர சென்னை மாநகராட்சிப் பகுதிகளில் 30 ஆயிரம் மஞ்சப்பைகள் வழங்கும் பணி மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதனைத் தொடர்ந்து, இந்த மார்க்கெட் பகுதிகளில் 5000 மஞ்சப்பைகள் வழங்க திட்டமிடப்பட்டிருக்கிறது. பூமியைக் காப்பது நமக்கு எவ்வளவு பெரிய கடமையாக உள்ளதோ, அதேபோன்று மனித வாழ்க்கையை காப்பதும் நம் கடமையாக உள்ளது.

சமீபகாலங்களில் சிறு வயதிலேயே நிறைய பேருக்கு புற்றுநோய் பாதிப்புகள் ஏற்படுகிறது. இதற்கு முக்கிய காரணம் பிளாஸ்டிக். பிளாஸ்டிக் பொருட்களில் நாம் உணவு எடுத்துக் கொள்வதினால் இந்தப் பாதிப்புகள் ஏற்படுகிறது. எனவே, எந்த அளவிற்கு பிளாஸ்டிக் பயன்பாடுகளை கடைகளிலேயே குறைத்து கொள்கிறீர்களோ, அந்த அளவிற்கு நம் மனித வாழ்விற்கும் பாதுகாப்பு ஏற்படும். பூமியில் வாழும் பிற உயிரினங்களுக்கும், கடல்வாழ் உயிரினங்களுக்கும் இதனால் பாதிப்புகள் ஏற்படுகிறது.

பிளாஸ்டிக் என்ற ஒரு பொருள் மனிதனுக்கும், பூமியில் வாழும் பிற உயிரினங்கள் மற்றும் கடல்வாழ் உயிரினங்கள் என நம்மைச் சுற்றியுள்ள அனைத்து உயிரினங்களுக்கும் பாதிப்பு ஏற்படுகிறது.

எனவே, இந்தப் பாதிப்புகளை தவிர்க்கும் வகையில் ஒவ்வொரு தனிமனிதரும் பிளாஸ்டிக் பயன்பாட்டைக் குறைத்து மரப் பொருட்கள் மற்றும் துணிப்பைகளைப் பயன்படுத்தி முதலில் தனிநபரிடம் ஒரு மாற்றத்தைக் கொண்டு வந்தால் தான் சமூகத்தில் மாற்றம் ஏற்படும். இளந்தலைமுறையினர் இந்தச் செயல்பாட்டினை பின்பற்றினால் தான் அவர்களின் சந்ததியினர் அதனை பின்பற்ற முடியும். எனவே, அனைவரும் மீண்டும் மஞ்சப்பைகளை பயன்படுத்தினால் தான் மாற்றம் கொண்டு வர முடியும்.

வியாபாரிகள் தங்கள் கடைகளில் மஞ்சப்பைகளைப் பயன்படுத்திடவும், கடைக்கு வரும் வாடிக்கையாளர்களுக்கு மஞ்சப்பைகளை வழங்கிடவும் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். அடுத்த தலைமுறையினருக்கு ஒரு சுகாதாரமான சூழலை ஏற்படுத்துவதற்காக தான் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் இந்தத் திட்டத்தை கொண்டு வந்துள்ளார்கள். எனவே, அனைவரும் பிளாஸ்டிக் பொருட்களை தவிர்த்து விட்டு, சுற்றுச்சூழலுக்கு உகந்த பொருட்களைப் பயன்படுத்திடவும், பிளாஸ்டிக் பைகளுக்கு பதிலாக மஞ்சப்பைகளைப் பயன்படுத்திடவும் கேட்டுக் கொள்கிறேன் எனத் தெரிவித்தார்.

இதனைத் தொடர்ந்து, மாண்புமிகு மேயர் அவர்கள், அம்பத்தூர் மண்டலம், வார்டு-80க்குட்பட்ட புதூர், பானுநகர் மயானபூமியினை மேம்படுத்துவது தொடர்பாகவும், புதூர் சுண்ணாம்பு குளத்தினை புனரமைத்து மேம்படுத்துவது தொடர்பாகவும், வார்டு-85, சிட்கோ தொழிற்பேட்டை சாலையில் அம்பத்தூர் ஏரியின் உபரிநீர் வெளியேறும் வகையில் அமைக்கப்பட்டு வரும் கால்வாய் பணியினையும் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

இந்நிகழ்ச்சிகளில், அம்பத்தூர் சட்டமன்ற உறுப்பினர் திரு. ஜோசப் சாமுவேல், மத்திய வட்டார துணை ஆணையர் திரு.கே.ஜெ.பிரவீன் குமார், இ.ஆ.ப., நிலைக்குழுத் தலைவர் (சுகாதாரம்) டாக்டர் கோ. சாந்தகுமாரி, மண்டலக் குழுத் தலைவர் திரு.பி.கே.மூர்த்தி, டெமினாஸ் இந்தியா பிரைவேட் லிமிடட் முதுநிலை துணைத் தலைவர் திரு.இ.எல்.வெங்கடேஸ்வரன், உத்கர்ஷ் குளோபல் பவுண்டேஷன் தலைமை நிர்வாக அலுவலர் அட்வகேட் தகாடு லோந்தே, மாமன்ற உறுப்பினர்கள் திருமதி க. பொற்கொடி, திரு.ம. கமல், மண்டல அலுவலர் திரு.ஜி.தமிழ்ச்செல்வன் மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

**செய்தி வெளியீடு : இணை இயக்குநர்/மக்கள் தொடர்பு அலுவலர்,**

**பெருநகர சென்னை மாநகராட்சி**